**செய்தி வெளியீடு எண்: 309** **நாள் : 26.06.2016**

**செய்தி வெளியீடு**

கன்னியாகுமரி மாவட்டம் கடியப்பட்டினம் மீனவ கிராமத்தை சேர்ந்த 4 தமிழக மீனவர்கள் ஐக்கிய அரபு நாட்டில், துபாய் நாட்டினை சேர்ந்த தனியாருக்கு சொந்தமான மீன்பிடி படகில் ஒப்பந்த தொழிலாளர்களாக அஜ்மான் கடல் பகுதியில் பணிபுரிந்து வந்தனர். கடந்த 6.2.2016 அன்று கடலில் மீன்பிடிக்கச் சென்று, மீன்பிடிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது வழி தவறி, ஈரான் நாட்டு கடல் பகுதிக்குள் சென்று விட்டனர். ஈரான் நாட்டு கடற்பகுதிக்குள் சென்றதன் காரணமாக, அந்நாட்டு கடலோர காவற்படையினரால் 7.2.2016 அன்று கைது செய்யப்பட்டு அந்நாட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். இக்கைது நடவடிக்கையின்போது, ஈரான் நாட்டு கடற்படையின் துப்பாக்கிச் சூட்டில் ஒரு மீனவர் கடுங்காயம் அடைந்து, ஈரான் நாட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இதனையறிந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஈரான் நாட்டு கடலோர காவற்படையினரால் கைது செய்யப்பட்ட 4 தமிழக மீனவர்களை விடுதலை செய்திட உடனடி நடவடிக்கை மேற்கொண்டார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணையின்படி, தமிழக அரசு அதிகாரிகள் ஈரான் நாட்டிலுள்ள இந்திய தூதரக அதிகாரிகளையும், மத்திய அரசின் வெளிவிவகாரத் துறையினையும் தொடர்பு கொண்டு, மேற்குறித்த 4 மீனவர்களின் விடுதலைக்கான அனைத்து சட்ட உதவிகளையும் அளித்து அவர்களை உடனடியாக விடுதலை செய்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணையின்படி தமிழக அரசு மேற்கொண்ட தொடர் முயற்சிகளின் பயனாக 4 தமிழக மீனவர்களும் ஈரான் நாட்டு அரசால் 30.4.2016 அன்று விடுதலை செய்யப்பட்டு கடந்த 1.5.2016 அன்று சென்னை வந்தடைந்தனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஈரான் நாட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்த 4 தமிழக மீனவர்களின் குடும்ப வறிய நிலையினைக் கருத்தில் கொண்டு, விடுதலையான மீனவர்கள் தமிழ்நாட்டில் புது வாழ்வை துவங்க ஏதுவாக முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து மீனவர் ஒவ்வொருவருக்கும் 2 லட்சம் ரூபாய் உதவித் தொகை வழங்க உத்தரவிட்டுள்ளார்கள்.

*******

**வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை- 9**
**நாள் : 26.6.2016**